விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 6 ஷவ்வா 1 இதழ் 130
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 20-6-1985

## இலங்கை இந்திய சட்ட நிபுணர்கள் சந்திப்பு திருப்தி!

### இந்திய வெளிவிவகார அமைச்சு

(புதுடில்லி)

''இலங்கை-இந்திய சட்ட நிபுணர்கள் கடந்த 'நான்கு தினங்களாக புதுடில்லியில் நடத்திய பேச்சுக்கள் திருப்தியளிப்பனவாகவுள்ளன'' என்று இந்திய வெளிவகார அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையின் விசேட தூதுவர் சட்டத்தரணி எச். டபிள்யு. ஜெயவர்த்தன தலைமையிலான குழுவும், இந்திய சட்ட மாஅதிபர் பரசுரன் தலைமையிலான குழுவும் இப்பேச்சுக்களில் கலந்துகொண்டன.

இப்பேச்சுக்களில் இலங்கை அரசியலமைப்பு உட்பட சட்ட விதிகள் குறித்த விடயங்கள் இருதரப்பு சட்ட நிபுணர்களாலும் ஆராயப்பட்டன.

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பான இப்பேசிசுக்கள் திருப்தியளிப்பனவாக அமைந்திருந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும் அவற்றின் விபரம் வெளியிடப்படவில்லை.

இதேவேளை திரு. எச். டபிள்யூ. ஜயவர்த்தன நேற்று இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியை சுமார் அரைமணிநேரம் சந்தித்து உரையாடினார். அவர் இன்று தாயகம் திரும்புகிறார் என்று அறிவிக்கப்பட்டது.

(கி-இ)

## அரசின் போர் நிறுத்த அறிவிப்பு

● அர்த்தமுள்ள நடவடிக்கை — 'அமிர்'

● சந்தேகங்களை நீக்கவேண்டும் — 'நீலன்'

# தீவிரவாதிகள் இணங்குவார்கள் என்பதில் ஆச்சரியமில்லை!

### — தொண்டமான்

(இ. கந்தசாமி)

''இலங்கை அரசின் போர் நிறுத்த அறிவிப்பு ஒரு அர்த்தமுள்ள நடவடிக்கை'' என்று த. வி. கூ. செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கமும், ''இந்த அறிவிப்பு தமிழர்கள் கொண்டுள்ள சந்தேகங்களை நீக்கவேண்டுமென'' கலாநிதி நீலன் திருச்செல்வமும், ''போர்நிறுத்த அறிவிப்பை அரசு முதலில் விடுப்பதால் இதற்கு தமிழ்த் தீவிரவாதிகள் இணங்குவார்கள் என்பதில் ஆச்சரியமில்லை'' என அமைச்சர் எஸ். தொண்டமானும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு அ அமிர்தலிங்கம், கலாநிதி நீலன் திருச்செல்வம், அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் ஆகியோர் அரசாங்கத்தின் போர் நிறுத்த அறிவிப்பை வரவேற்றுள்ளனர்.

திரு. அமிர்தலிங்கம் சென்னையில் இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

''இலங்கை இனப்பிரச்னைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண அரசு மேற்கொண்டுள்ள போர் நிறுத்தம் ஓர் அர்த்தமுள்ள நடவடிக்கையாகும். இது இலங்கைத் தமிழர்களுக்கு ஆறுதல் தரும் செய்தியாகும். தீவிரவாதிகளையும் பேச்சுக்கு அழைக்கவேண்டும்'' என்றார்.

இலங்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் கலாநிதி நீலன் திருச்செல்வம் விடுத்துள்ள செய்தி வருமாறு:

அரசாங்கம் அறிவித்துள்ளது வரவேற்கக்கூடியதொன்றாகும்.

இதேவேளை இந்த அறிவிப்பு தமிழ் மக்களின் ஐயப்பாடுகளை நிவர்த்தி செய்வதாகவும்

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கை 'போர்நிறுத்தம்' இந்திய ராஜதந்திரத்துக்கு ஒரு வெற்றி!

### தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர்

(சென்னை)

''இலங்கையில்ஏற்பட்டுள்ள போர் நிறுத்தம் இந்திய ராஜதந்திர நடவடிக்கைக்கு ஒரு வெற்றியாகும்'' என்று தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. பழனியாண்டி சென்னையில் நிருபர்கள் மத்தியில் நேற்றுத் தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைப் பாலம் தகர்ப்பு சம்பந்தமில்லை என்கிறது புலிகள் இயக்கம்!

(யாழ்ப்பாணம்)

ஓமந்தைப்பாலம் தகர்ப்புச் சம்பவத்துக்கும் தமக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்று 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கம் தமது பரீட்சார்த்த வானொலிச் செய்தியில் இது தொடர்பான அறிக்கை

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் ஒரு லட்சம் ரூபா எரிபொருள் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

பெற்றோலியம் கூட்டுத்தாபன யாழ்ப்பாணக் கிளையிலிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான எரிபொருள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

சம்பவதினம் இரவு இனம் தெரியாத எட்டு நபர்கள். மேற்படி கூட்டுத்தாபனக் கிளை

(8ம் பக்கம் பார்க்க)

## தணிக்கை தொடர்ந்து அமுல்

(கொழும்பு)

பத்திரிகைத் தணிக்கைச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்குமென்றும்; பாதுகாப்புத் தேவைகளை முன்னிட்டு அவசரகாலச் சட்டம் தொடர்ந்து மேலும் ஒரு மாதம் நீடிக்கப் பட்டுள்ளதென்றும் அமைச்சரவைப் பேச்சாளரும், ராஜாங்க அமைச்சருமான கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் பத்திரிகையாளர் மத்தியில் நேற்றுத் தெரிவித்தார். [ரா

## ✯ யாழ்நகர வீதித் திருத்த வேலைகள்

# எதிர்வரும் திங்கட்கிழமை முழுஅளவில்ஆரம்பம்!

### ஆணையாளர் அறிவிப்பு

## மாநகரசபை டிராக்டர்களை ஒப்படைக்கும்படியும் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகர வீதித் திருத்த வேலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் முழுஅளவில் ஆரம்பமாகும் என்று யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சி வீ. கே சிவஞானம் அறிவித்துள்ளார்.

நேற்று கோட்டை ராணுவ தலைமையகத்தில் திரு. சிவஞானம், பிரிகேடியர் வணசிங்கா, பொலிஸ் அத்தியட்சகர் அபேயகுணவர்த்தன ஆகியோரைச் சந்தித்தார்.

இதனைத் தொடர்ந்தே யாழ் நகர வீதித்திருத்த வேலைகள் ஆரம்பமாகவிருப்பதை ஆணையாளர் அறிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கடந்த பல மாதகாலமாக புறக்கணிக்கப்பட்டு வந்த சகல யாழ் நகரப் பகுதி வீதிகளும் திருத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத்திருத்தவேலைகளுக்கு ஒத்தாசை வழங்கும் வகையில் யாழ் மாநகரசபையில்இருந்து

(8-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் இலங்கை-இந்திய கப்பல் சேவை

(கொழும்பு)

இலங்கை - இந்தியாவுக்கான கப்பல் சேவை ஜூலை 15ம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். பெரியாஸ்பத்திரிக்கு புதிய 5 மாடிக் கட்டிடம்!

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கான புதிய ஐந்துமாடி கட்டிடமொன்று 2 கோடி 36 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது

யாழ் மாவட்ட அமைச்சு இதற்கான நிதியை ஒதுக்க உள்ள அதேநேரத்தில் போதனா ஆஸ்பத்திரிகளுக்கான அமைச்சர் திருமதி சுமனத்ரா ரணசிங்காவினால் இது சம்பந்தமான அறிக்கையொன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ரா)

## நயினை உற்சவம்

# குறுக்கீடுகள் இருக்காதென உதவி அரச அதிபரிடம் உறுதி!

### காலை முதல் மாலைவரை படகுசேவை

(வேலணை)

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாயிற்று.

வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் உற்சவ மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகள்

[8ம் பக்கம் பார்க்க]

# அசி ஈளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ ரூ 250/- பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
3877

முல்லைத்தீவு பேரூந்து நிலையத்திற்கு அருகில் 4½ பரப்புக் காணி சிறு கட்டிடத்துடன் (தேவி டிஸ்பென்சறி) விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு: கருணகிரிநாதன், 5'3, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.
3894

நீர்வேலி வடக்கில் சுன்னாகம் றோட்டில் சகல வசதிகளும் கொண்ட வீடு கட்டக் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: நா. பாலசுப்பிரமணியம், இராசவீதி, வைரவகோவிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
(3911)

உரிமையாளர் வெளிநாடு செல்லவிருப்பதனால், யாழ்நகருக்கு அண்மையில் (3 மைல் தூரத்தில்) இருக்கும் நாளாந்தம் வருமானம் தந்துகொண்டிருக்கும் ஒரு கிறைண்டிங் மில் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல 3905. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(3905)

மாவிட்டபுரம் மயிலிட்டி வீதியில் வீமன்காமம் வடக்கு தெல்லிப்பழையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக் குண்டு. சீமெந்து தொழிற்சாலை ஒரு மைல் தொலைவில் உண்டு. விபரங்கட்கு: சி. மனோகரன், பொற்பதி வீதி, கொக்குவில்.
(3926)

## தேவை

ஆங்கில அறிவும் பேச்சு வன்மையும் உடைய 25—40 வயதுக்குட்பட்ட பெண் லிகிதர் ஒருவர் உடன் தேவை. நேரில் வந்து சந்திக்கவும். உணவு, தங்குமிடவசதியும் உண்டு. தகுந்த வேதனம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி; ஸ்ரீ ஹரி ஷிபா ஆத்ம ஆரோக்கிய நிலயம், இல. 125. கடற்கரை வீதி. பழைய குருநகர் பொலிஸ்நிலையம் அருகில், குருநகர்
(3919)

## மணப்பந்தல்

யாழ்ப்பாணம் இந்து உயர்குல வேளாள பெற்றோர் 28 வயதுடையவரும், அழகுள்ளவரும் லண்டனில் B Sc (Civil Eng.) சித்தியடைந்து அங்கு தொழில் புரிபவரும் மேலும் M Sc செய்பவரும் கடந்த பத்து வருடங்களாக அங்கு வதிபவரும் நிரந்தரப் பிரஜையாகும் தகுதியைப் பெறுவருமான தங்கள் மகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த தகுந்த B D S. அல்லது M B B S தராதரமுள்ள மணமகளைத் தேடுகிறார்கள் பிரிட்டனில் இருப்பவர் விரும்பத்தகுந்தது. குடும்ப விபரம், சாதகக்குறிப்பு, சீதன விபரம், அண்மையில் எடுத்த புகைப்படம் என்பவற்றை அனுப்பி வையுங்கள் தொடர்பு: விளம்பர இல 3917, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(39.7)

## தேவை

12'' கட்டர் (Disintegrator), 12'' கிறைண்டர், 10 H P. மோட்டர், 5, 10 அந்தர் Avery தராசு தேவை. விலை விபரம் அறிவிக்கவும். விளம்பர இல: 3879 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
3879

## தவறிவிட்டது

இல. 320500417 V அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். கணபதி பிள்ளை சின்னத்துரை "புளியடி", கரணவாய் தெற்கு. கரவெட்டி.
(3912)

## குத்தகைக்கு

அரிசி ஆலை 75 மூடை காயக் கூடிய களம் நன்கு வியாபாரம் நடக்கும் ஆலை குத்தகைக்குக் கொடுக்கப்படும் வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வீதியில் தொடர்பு கொள்ளவும்.
(3918)

கோப்பாய் தெற்கிறை கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியில் பருத்தியடைப்பு என்னும் சுவர் வைத்தபுலம் பரப்பு இருபது 1986-ம் வருடம் ஆடி மாதம் தொடக்கம் ஐந்து வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்படும். தொடர்பு: சி சிவக்கொழுந்து தத்துவகாரன், முக்குறுணிப் பிள்ளையார் கோவில் வீதி, கல்வியங்காடு.
(3915)

## ஈத் முபாரக்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தமது
புனித றம்ழான் பெருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

**அமீர் ரெக்ஸ்**

[வட இலங்கை பிரசித்த தையல் நிலையம்]
73, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23021 [3909]

## உருக்கமான வேண்டுகோள்

**ஜோதி ஜுவலர்ஸ்,**
அடைவு பிடிப்பவர்கள்,
34, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

17-6-85 அன்று இரவு எமது ஸ்தாபனத்தில் இனந்தெரியாத நபர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்ட தங்கநகைகள் யாவும் பொதுமக்களால் எம்மிடம் அடைவுக்காக வைக்கப்பட்டவையாகும். இதனால் பாதிக்கப்படுபவர்களும் பொது மக்களாகும் ஆகவே தயவுசெய்து பொது மக்களின் நன்மைகருதி கொள்ளையிட்ட நகைகளை திரும்ப ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
இப்படிக்கு

**ஜோதி ஜுவலர்ஸ்,**
அடைவு பிடிப்பாளர்.
3907

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
பாறுபதி
கணபதிப்பிள்ளை

மலர்வு
19-10-1920

அமரத்துவம்:
22-05-1985

அன்புடனும், அறிவுடனும் எம்மை ஆளாக்கி ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைந்துவிட்ட அன்புத் தெய்வமாம் அன்னையே, நின்பிரிவு நீங்கினும் உங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்காது.
உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் நாம் பிரார்த்தனை செய்வோம்.

சொல்லொணாத் துயரில் வாழும் உங்கள் செல்வங்கள்:
க. பரமநாதன் (France)
(முன்னாள் உணவுத் திணைக்கள உத்தியோகத்தர்)
க. நடராசா (France),
க. சிவராசா (Canada),
க. சரோஜினி
க. அன்னலஷ்மி.

புற்றளை,
புலோலி தெற்கு, புலோலி. (3839)

## Investment Opportunity

An excellent opportunity exists in a well established and ongoing enterprise engaged in trading activities of Agency and the Company's own lines of products; both wholesale and retail.

The Company is looking for investors of good standing to join the management at this time when the Company is carrying-out its expansion programme. The investment is expected to be in the region of five lakhs.

For further details, write to:
Advertiser M 14, C/o Dyn Ads,
476, Main Street, Chundikuli,
Jaffna.

Dyn Ads

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நாகப்பர்
நாகராசா

அன்னை மடியில்:
30-6-1948

இறைவன் அடியில்:
30 6-1984

திதி:
20-6-1985


அன்பின் திருவுருவாய் — பாசத்தின் உறைவிடமாய்,
குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து திடீரென
அணைந்துவிட்ட எங்கள் குலச்சுடரே!
எம்மையெல்லாம் என்றென்றும் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு தெய்வத்துடன் சங்கமம் ஆன
அன்புச் செல்வமே, நீர்மறைந்து இன்று [20-6-1985]
ஒருவருடமானாலும் வாழ்ந்த காலங்களில்
உங்கள் இனிய நினைவுகளை மறக்கமுடியாமல்
தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்
தாய், சகோதரர்கள், பிள்ளைகள், மனைவி, மக்கள்.
வேலணை.

ராசன் சலூன் உரிமையாளர்.
புங்குடுதீவு 3914

## ஓராண்டு நினைவஞ்சலி

21-06-85
செல்வன்
குமாரசுவாமி
பாலச்சந்திரன்



இராமநாதபுரம்,
கிளிநொச்சி

தோற்றம்:
21-3-1956

மறைவு:
29-6-1984

மனிதருள் மாணிக்கமாய் துலங்கிய மாவீரனே
கண்ணை இமை காத்தாற்போல் எமைக்காத்தாயே
அல்லும் பகலும் எமக்காகப் பாடுபட்டாயே
உமதன்பு எமக்குக் கிடைத்த பாக்கியமென
பூரித்திருந்தோமே
உமக்கு ஏற்பட்ட துயரங்களை மறந்து
எம்மை இன்பத்தில ஆழ்த்தினயே
இவ்வுலகில் இனிக்குறையேதும் இல்லையென
நாம் இறுமாப்புடனிருந்தோமே.
உமக்கு வந்தது சதிசேர்ந்த விதியோ - இல்லை இல்லை
திமிர்ந்த பெருமெஞ்ஞானத் தெளிவோடு ஒளிதாங்கி
நிமிர்ந்த உனை நிதம் துதிக்கும் நிலைகண்டு
அதிர்ந்தனரோ அநியாய அக்கிரம அரக்கர் குலம்
உமது மறைவால் நாம் வாடி வதங்கி
வருந்தியழும எம் இதயத் துடிப்பும்,
எம் கண்களிலிருந்து வடியும் ஆறாக் கண்ணீரும்
உமது ஆத்மா சாந்தியடையவும்
உமதன்பு சோதரன் சிவநேசன்
ஆத்மா சாந்தியடையவும்
அரக்கர்களை நீராக்கவும் உதவட்டும்
சோகத்தால் வாடி நிற்கும்
பெற்றோர், சகோதர சகோதரிகள்,
உறவினர்கள்.

இராமநாதபுரம், கிளிநொச்சி. (3916)

# சோவியத் - அமெரிக்க விண்வெளி ஆயுதப் பேச்சுக்கள் ஜெனிவாவில் நேற்று நடந்தது!

## அமெரிக்க துணை அதிபர் பிரதிநிதிகளை சந்திப்பார்

வாஷிங்டன், ஜூன் 19 ஜெனிவாவில் அமெரிக்க, சோவியத் பிரதிநிதிகள் விண்வெளியில் ஆயுதங்களின் கட்டுப்பாடு குறித்து நேற்று மூன்றரைமணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்கள்

சென்ற மாதம் 30ம் திகதி இரு வல்லரசுகளும் தங்களது சமீபத்திய சுற்றுப் பேச்சுவார்த்தைகளைத் துவக்கியபின்னர் இது விண்வெளி ஆயுதங்கள் குறித்து அவர்கள் நடத்தும் மூன்றாவது கூட்டமாகும்.

ஞாயிற்றுக்கிழமையன்று ஐரோப்பிய சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அமெரிக்க துணை அதிபர் திரு. ஜோர்ஜ் புஸ் ஜெனிவா செல்கையில் அமெரிக்காவின் தலைமைப் பேச்சாளர் திரு. மார்க்ஸ் கம்பல்மானைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைபற்றிப் பரிசீலிக்கக்கூடும். பேச்சுவார்த்தைகளுக்கு ஊக்கம் அளிப்பதற்காக அவர் சோவியத்தரப்பில் பேச்சு நடத்துகிறவர்களையும் சந்திக்கக்கூடும் என வாஷிங்டனில் அதிகாரிகள் கூறுகின்றனர். (க)

## அரபு செயற்கைக்கோள் 8000 புதிய தொலைபேசி இணைப்புகளை ஏற்படுத்தும்!

வாஷிங்டன், ஜூன் 19 அமெரிக்க விண்வெளி சட்டில் டிஸ்கவரி அரபு செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்வெளியில் செலுத்தியது. புஸ்டனின் பயணக்கட்டுப்பாட்டு நிலையம் இதனை அறிவித்ததையடுத்து அந்த அரபு தொலைத் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் விண்வெளியில் செலுத்தப்படுவதற்கு ஏற்றதல்ல என்ற ஐயப்பாடுகள் அகன்றன.

அந்த செயற்கைக்கோள் அரபுலீக் நாடுகளில் 8000 தொலைபேசி லைன்களையும் 7 தொலைக்காட்சி சானல்களையும் ஏற்படுத்தும். இது விண்வெளியிலுள்ள இரண்டாவது அரபு செயற்கைக் கோளாகும் முதலாவது செயற்கைக்கோள் சென்ற பெப்ரவரி மாதம் செலுத்தப்பட்டது. (க)

## இலங்கைப் பிரச்னை தொடர்பாக மதுரையில் கைதான 500 பேர் விடுதலை!

சென்னை, ஜூன் 19 நமது கழகப் பொதுச்செயலாளர் திரு எஸ். வி. சோமசுந்தரமும், அக்கட்சித்தொண்டர்கள் சுமார் 500 பேரும் மதுரை தலைமைத்துறை மாஜிஸ்திரேட்டினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்தியா நடந்துகொள்ளும்விதத்தில் கண்டனம் தெரிவித்து மதுரை ரயில் சந்திப்பில் திருப்பதி எக்ஸ்பிரஸ் முன்னால் மறியல் செய்ய முயன்றதாக இவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதித்துறைக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். (க)

## பொது மக்கள்மீது தாக்குதல்: தென்னாபிரிக்கா மீது புதுடில்லி கண்டனம்

புதுடில்லி, ஜூன் 19 பொட்சுவானாவில் பொது மக்கள்மீது தென்னாபிரிக்கா அரசு தொடுத்த தாக்குதலை புதுடில்லி வன்மையாகக் கண்டித்துள்ளது அந்நாட்டில் அந்தத் தாக்குதலுக்கு ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகின. அண்டை நாடுகள் மீது தாக்குதல் தொடுப்பதில்லை என்று மீண்டும் மீண்டும் அளித்த உறுதிமொழியை மதிக்காது தென்னாபிரிக்கா இவ்வாறு தாக்குதல் தொடுத்ததாக புதுடில்லியில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

## சிரியாவின் ஏற்பாட்டில் பெய்ரூட் அகதி முகாம் சண்டைகள் நிறுத்தம்

லண்டன், ஜூன் 19 பெய்ரூட்டில் அகதிமுகாம்களை வசப்படுத்துவதற்காக பலஸ்தீனியர்களுடன் நடத்திய ஒருமாதகால சண்டை முடிந்துவிட்டதாகவும் இறுதிப்போர் ஓய்வுக்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் சிரிய முஸ்லிம் தலைவர் திரு நமிபெரி நேற்று அறிவித்தார்.

595 பேர் இறக்கவும் 2381 பேர் காயமடையவும் காரணமான இந்தச் சண்டை நிறுத்தப்பட்டபின்னர் சிற்சில துப்பாக்கி வெடிப்புகளும் ஏவுகணைத் தாக்குதலும் நடந்ததாகப் பொலிசார் தெரிவித்தனர்

சிரியா அதிபர் அசாதின் மத்தியஸ்த முயற்சியினால் இந்தச்சண்டை நிறுத்தம் ஏற்பட்டதாக நிருபர் கூட்டத்தில் திரு. பெரி கூறினார். (க)

## ஆலய உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோவில் கைலாசவாகனம் இன்று இடம்பெறும், 23 ம் திகதி சப்பரமும், 24 ம் திகதி தேர்திருவிழாவும், 25 ம் திகதி தீர்த்தமும் இடம்பெறும்.

## தஞ்சாவூரில் தீ விபத்து

(சென்னை)

தஞ்சாவூரில் நடந்த தீவிபத்தில் 2 பேர் பலியானார்கள். பலர் காயமடைந்தனர்.

இத்தீவிபத்தில் ஆயிரம் வீடுகள் தீக்கிரையாகியுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 300 ரூபாவும், மண்ணெண்ணை உடைகள் வழங்குமாறு பணிக்கப் பட்டுள்ளது. (க)

## பாடநூல்கள் இலவசம்

(சென்னை)

ஆந்திர அரசு பள்ளி மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களையும் சீருடைகளையும் இலவசமாக வழங்க முடிவுசெய்துள்ளது. இதனால் 29 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள்' இதற்கு 6 கோடி ரூபா ஆண்டுதோறும் செலவாகும், (க)

## சர்வதேச திரைப்பட விழாவில் சாரான்ஷ்

(புதுடில்லி)

தேசிய விருது பெற்ற ஹிந்தி திரைப்படம் சாரான்ஷ் மாஸ்கோவில் இந்த மாதம் 28ம் தேதி துவங்கவிருக்கும் சர்வதேச திரைப்பட விழாவின் போட்டிப் பிரிவுக்கு இந்தியாவின் சார்பில் அனுப்பப் பட்டுள்ளது. (க)

## 1வது கிரிக்கெட் டெஸ்ட் இங்கிலாந்து வெற்றி

(லீட்ஸ்)

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே இங்கிலாந்தில் நடைபெற்ற 1வது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து 5 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

இறுதி ஸ்கோர் அவுஸ்திரேலியா: 331, 324. இங்கிலாந்து: 533, 5-123.

## பாடசாலை முன்னேற்றத்துக்கு அபி. சங்கங்களின் பங்கு

[பண்டத்தரிப்பு]

''இன்றைய காலகட்டத்தில் பாடசாலைகளின் குறைபாடுகளை அரசாங்கம் நிறைவேற்றித்தரும் என்று எதிர்பார்க்கமுடியாது பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களே முன்னின்று முயற்சிசெய்து பாடசாலைகளின் முக்கிய தேவைகளையும் திருத்தவேலைகளையும் பூர்த்திசெய்ய வேண்டும்.''

இவ்வாறு சில்லாலை றோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய சங்க செயலாளரும், சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் மாவட்ட ஆணையாளருமான டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. எஸ். லோறன்ஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு பி இருதயதாஸ் அடிகள் உரையாற்றுகையில்,

''தொலைக்காட்சியினால் மாணவர்களின் கல்விக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது என்றும், ஒழுக்கமும் பண்பாடுமிக்க கல்வியையே மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து பெறவேண்டும்'' என்றும் குறிப்பிட்டார். சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு எஸ். லோறன்ஸ், செயலாளர்; டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி பொருளாளர்: திருமதி சிசிலியா இராயப்பு

செயற்குழு உறுப்பினர்களாக 12 பேர் தெரிவுசெய்யப் பட்டனர்.

## கொள்ளைகளை கண்டித்து— கரைச்சி ப. நோ. கூ. சங்க ஊழியர்கள் வேலை நிறுத்தம்

[கிளிநொச்சி]

கரைச்சி [பரந்தன்] வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அடிக்கடி இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்களைக் கண்டித்து இச் சங்கத்தின் சகல கிளைகளின் ஊழியர்களும் தலைமைப்பீட ஊழியர்களும் கடந்த சில தினங்களாக வேலை நிறுத்தமொன்றில் குதித்துள்ளனர்.

13-ம் திகதியும் சங்கப் பெற்றோல் நிலையத்தில் காவலாளி தாக்கப்பட்ட சம்பவமும், அதைத் தொடர்ந்து கொள்ளைச் சம்பவமும் இடம்பெற்றுள்ளதாகவும் இதேபோல் முன்பும் கொள்ளைகள் நடைபெற்றுள்ளதாகவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோர் வெளியிட்டுள்ள பிரசுரமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து பரந்தன் பகுதி வர்த்தகர்களும் 17-ம் திகதி அன்று கடையடைப்பு செய்தனர்.

## சம்பளஉயர்வு கிடைக்கவில்லை

[பண்டத்தரிப்பு]

கடந்த 97?-ம் ஆண்டிலும் அதற்குப்பின்பும் சிங்கள தேர்ச்சி சோதனையில் சித்திபெற்ற மருத்துவ மாதர்களுக்கு இதுவரை சிங்கள தேர்ச்சியின்மை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட வருடாந்த சம்பள உயர்வும், பதவி ஊர்ஜிதமும், பதவி நிரந்தரமும் கிடைக்கவில்லை என்று பலத்த புகார் தெரிவிக்கப்படுகின்றது,

யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் இதுபற்றி முறையிட்டபோது கொழும்பிலுள்ள சுகாதார தலைமை அலுவலகத்திலிருந்து இது பற்றிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் கோரிய பத்திரங்கள் யாவும் அனுப்பிவைத்தும் இதற்கான அனுமதி இன்னும் தமது அலுவலகத்திற்கு கிடைக்கவில்லை என்று தெரிவித்திருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மேற்படி மருத்துவ மாதர்கள் தெரிவித்தனர்.

## கலாவதி மரண விசாரணை 24ல் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கலாவதி மரணவிசாரணை தீர்ப்பு இம்மாதம் 24ம் திகதி வழங்கப்படவிருக்கிறது

யாழ் நீதி மன்றத்தில் நீதவான் எஸ். தங்கராசா முன்னிலையில் இவ் விசாரணை நடைபெற்றது. (ஈ)

## பாடசாலையை மீண்டும் திறக்கவும்

[பூநகரி]

பூநகரி கல்வி வட்டாரத்தில் அமைந்துள்ள பல்லாய் செம்மன் குண்டுப் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியர்கள் இல்லாமையால் நீண்டகாலமாக மூடப்பட்டுள்ளது. இது இப்பகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பாடசாலையாகும். இப்பாடசாலையை மீண்டும் திறக்குமாறு கிளிநொச்சிப் பிராந்திய கல்வி அதிகாரிக்கும் மற்றைய உயர் அதிகாரிகளுக்கும் அவ்வூர் மக்கள் முறைப்பாடு செய்தும்இன்றுவரை இப் பாடசாலையை திறக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை (கெ)

## கௌரவிக்கப் பட்டனர்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் மத்தி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் பலஆண்டுகளாக பஜனைத் தொண்டு செய்து வருவோரை கௌரவிக்கும் முகமாக தொல்புரம் இந்து இளைஞர் மன்றம் கௌரவிப்பு விழா ஒன்றை நடத்தியது

இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு, நா முருகையாவின் தலைமையில் இவ்விழா நடைபெற்றது இவ்விழாவில் திருவாளர்கள்: கா, சின்னத்துரை, க. சிவசம்பு. வ. அமிர்தலிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டனர்,

### மணி வாக்கு

கல்வியிலும் பெரிது துன்ப அனுபவம்.

—ஆன்ம விசாரம்

## நமது நோக்கு

# வாழ்க்கையின் பெ. சா. மு.

''ஓ ஞ சென்றும் உண்மைச் சீலம் எது என்பதை அறிந்துகொள்'' என்று திருவாய் மலர்ந்தருளிய முகம்மது நபியின் சிந்தனை இந்த நாட்டுக்கும் இங்கு வாழும் மக்கள் அனைவருக்கும் இன்று மிக அவசியமானது.

இஸ்லாமிய பண்பாடு பற்றி உண்மையான விளக்கம் ஏனைய சமயத்தோருக்கு இல்லாதிருப்பது இன்று உலகிருக்கும் கட்டத்தில் மடைமை மட்டுமல்ல, மிக ஆபத்தானதுங்கூட.

விஞ்ஞான வளர்ச்சியால் எம்மிற் பலர் ஒரு வாரத்துக்குள் பல நாடுகளையும் நாகரிகங்களையும் காணும் அனுபவம் பெற்றுள்ளோம்.

இதற்குமேலாக உலகம் ஒரு சிறு உருண்டைபோல சுருங்கிவருவதால் ஒரு நாட்டில் கிளம்பும் குழப்பம் பல நாடுகளில் ஆபத்தை விளைவிக்கவல்லது

அண்மையில் எங்கள் நாட்டுக்கு வரவழைக்கப்பட்ட 'மொசாட்' படையினர் பற்றி என்னென்ன அவலங்கள் அரும்பின. இது நல்ல எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இந்திய உபகண்டம் இரண்டாகப் பிரியவந்தமை பாரதப் பண்பாட்டில் இஸ்லாமிய பண்பாடு ஒரு முக்கியமான அம்சம் என்பதை நாளாந்த வாழ்க்கையில் பாரத மக்கள் நெறிப்படுத்தமுடியாமையே! இதனைப் படு தோல்வியாகக் கொண்டவர் மகாத்மா காந்தி

ஆயிரம் வருடங்களுக்கு மேல் இந்துக்களும் இஸ்லாமியரும் ஒரு தேசத்தவராகவும் அயலவராகவும் வாழ்ந்த பண்பு ஓரளவிற்குப் பறிபோன கட்டத்திலும் பாகிஸ்தானில் வாழும் முஸ்லிம்களின் தொகைக்கு அதிகமானதே இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள்; இந்த உண்மை வெளிநாட்டவர் பலருக்குத் தெரிவதில்லை; இஸ்லாமிய பண்பாடு பாரதத்தில் இரண்டறக் கலந்திருக்கிறது.

அகில உலகுக்குமே சகிப்புத்தன்மை, மனிதாபிமானம் என்ற கோட்பாடுகளை எடுத்துரைக்கும் இஸ்லாமின் பேரில் அமைந்த பாகிஸ்தான் அணுகுண்டுக்கு இருப்பிடமாகவும், புத்தர் அவதரித்த இந்தியா இந்த அபாயத்துக்கு உள்ளாவதும் இன்று உலக விவகாரங்களில் பெருமிடம் பெற்றிருக்கின்றது.

உலகில் அதிகாரபலம் பெற்ற அரசியல் போக்கு இவ்வாறிருக்க, எங்கள் சிறிய நாட்டில் வாழும் இனங்கள் சமாதானமாக வாழ இஸ்லாமிய போதனை முதலிடம் பெற வேண்டும். நடப்பதென்ன? இஸ்லாமையும் இனத்துவேசத்தையும் ஒன்றிணைத்தது இதுதான் முதல் தடவையா?

தெய்வம் உண்டென்றும், தெய்வம் ஒன்றென்றும் வற்புறுத்தும் இஸ்லாம், வேறெந்த மதத்தையும் குறை கூறவில்லை; அத்தகைய எதிர்மறைப் பண்பு மட்டுமல்ல, உலகம் தோன்றிய காலம்தொட்டு ஜீவன் முத்தர்கள் பல நாடுகளிலும், சமூகங்களிலும் தோன்றியுள்ளனர் என்றும் அவர்களின் ஆன்மீக போதனைகள் அனைத்தும் இஸ்லாமுக்கு உடன்பாடானவையென்றும் குரான் தெளிவாகச் சொல்லியிருக்கிறது

இவ்வித தூய்மையான போதனை இம்மதத்தில் முதன்மை பெறுவதால் சகோதரத்துவம், வாழ்க்கை என்னும் தாயகணித்தில் பெருஞ்சாதாரண முற்று என்று கணிக்கப்படுகிறது. இதுவே இஸ்லாமின் தனித்துவ சிறப்பு.

கோட்பாட்டுக்கமைய, சமய சீலர்களாக மக்கள் வாழவில்லை என்ற குறைபாட்டை சமயத்தில் வைத்து கண்டிப்பது அறியாமை.

பௌத்த பண்பாடு என்ற பெருமைக்குரித்தான மக்கள் வாழும் நாடு இலங்கை. சைவத்தின் பெருமையை இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காணலாம். இருப்பினும் தத்தம் சமய கோட்பாடுகளுக்கமைய நாம் நடந்து கொள்கின்றோமா?

இன்று உலகில் நிலவும் 'நாகரிக வாழ்வு' சமாதானத்துக்கு முரண்பட்டிருப்பதை நாம் நேரில் காண்கின்றோம். இந்த ஒரு பானை சோற்றிற்கு எங்கள் நாடே ஒரு அவிளாக இருக்கின்றது. எங்கள் நாட்டில் இன்று சமாதான வாழ்வு தவிர்க்கமுடியாத நிலை. போரில் உண்டான களைப்பு நாடனைத்திலும் காணப்படுகிறது.

இனத்துவேஷம் ஒரு பாஷாணம் என்பது கைப்புண் போல தெளிவாகிறது.

இதற்கு இஸ்லாமின் பரிகாரம் என்ன?

'புயல்' என்ற ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் கலிபான் என்ற பாத்திரம் பேசுகிறது: ''ராட்சதனுடைய பலம் இருப்பது நன்று, ஆனால் ராட்சதன் போல் அதனைப் பயன்படுத்துவது தீது''

நாட்டின் பலமே அதன் செல்வம்; ஆனால் அது நாட்டு மக்கள் அனைவருக்கும் உதவ வேண்டும் என்ன அடிப்படையில்? மனிதன் என்ற அடிப்படையில். வேறென்ன அடிப்படையில்? இறைவன் ஒருவனின் படைப்பு என்ற அடிப்படையில்:''

## படகு சேவை நடக்கிறது

[நெடுந்தீவு]

நெடுந்தீவுப் - குறிகாட்டுவான் பிரயாணிகள் படகுச் சேவை இப்பொழுது வழமைக்குத் திரும்பியுள்ளது கடலில் ஏற்பட்டுள்ள வன் செயலின் பின் போக்குவரத்தில் பெருந்தடங்கல் இருந்து வந்தது தெரிந்ததே.

### ★ இன்று ஈதுல்பித்ர் பெருநாள் ★

# சொல்லாலும் செயலாலும் சகோதரத்துவத்தை உறுதிப்படுத்தும் திருநாள்!

கடந்த மாதம் முழுவதும் முஸ்லிம்கள் புனித ரமழான் நோன்பை நோற்று இன்று ''ஈதுல் பித்ர்'' பெருநாளைக் கொண்டாடுகின்றனர். வசதியற்றோருக்கு உணவளித்து அவர்களையும் மகிழ்விக்கும் ஒரு சிறப்புமிகு நாளே இப்பெருநாள் உலக முஸ்லிம்கள் ஏக நாயனின் கட்டளைக்கு அடிபணிந்து, சொல்லாலும், செயலாலும் சகோதரத்துவத்தை உறுதிப்படுத்தும் திருநாளாக இது அமைகின்றது.

இஸ்லாத்தின் கட்டளைகள், கடமைகள் ஏழை பணக்காரர் என்னும் பேதமின்றியும் ஆண் பெண் வித்தியாச மின்றியும் நாடு, இன பேதமின்றியும் அனைவரும் நிறைவேற்ற வேண்டியவையாகும். புனித ரமழான் மாதம் முழுவதும் கடமையான நோன்பும் அவ்வாறனதே. பத்து வயதை அடைந்த ஒருவருக்கு இஸ்லாமியக் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பு ஏற்படுகின்றது.

நோன்பு நோற்ற ஒருவர் உண்ணாமல், பருகாமல், எப்பொருளையும் உட்கொள்ளாமல் உடலுறவு கொள்ளாமல், புறம் பேசாமல், நாவாலும் உறுப்புக்களாலும் எவ்வித பாபமான செயலையும் செய்யாமல் முற்றும் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு வாழ்ந்துள்ளார். ''எவர் தமது ஆத்மாவை பரிசுத்தமாக்கிக் கொண்டாரோ அவர் வெற்றி பெற்றுவிட்டார்'' என்னும் அல்குர் ஆனின் போதனைக்கமைய, ஒவ்வொரு நோன்பாளியும் பகல் முழுவதும் விரதமிருந்து, மனித உணர்வுகளை அடக்கி ஆளும் தன்மை பெற்று இரவின் பெரும் பகுதியை இறை வணக்கத்தில் ஈடுபடுத்தி வந்தார்.

புனித ரமழான் மாதத்தினை மூன்று பகுதிகளாகப் பிரித்து முதற்பகுதியில் இறைவனிடம் அருள் வேண்டி இறைஞ்சினர். இரண்டாம் பகுதியில் ஏக நாயனும் வேண்டுகோளை ஏற்று விடையளிப்பவனுமாகிய அல்லாஹ்விடம் பாப மன்னிப்பு வேண்டி பிரார்த்தனை புரிந்தார். தனக்காகவும் தன் குடும்பத்திற்காகவும், மனித சமுதாயத்தின் நேர் வழிக்காகவும் பிரார்த்தனைகளை இறைவனிடம் சமர்ப்பித்தார் ''எனது அடியான் என்னைப்பற்றி விசாரணை செய்தால் மிக நெருக்கமாக இருக்கின்றேன். (என நபியே கூறுவீராக) வேண்டுகோள்களை ஏற்று அவற்றிற்கு விடையளிக்கின்றேன். என்னிடமே பிரார்த்திக்கட்டும் அவர்கள் நேர்வழி பெறலாம்'' என்னும் அல்லாஹ்வின் அருள் வாக்கை பூரணமாக விசுவாசித்த ஒவ்வொரு முஸ்லிமும் தமது பிரார்த்தனைகளை அவ்வடிப் படையில் அமைத்துக் கொண்டார்கள்.

இறுதிப் பகுதியில் நரகத்தில் இருந்தும் விடுதலை பெறுவதற்கான பிரார்த்தனைகளைப் புரிந்தார்கள். ஒவ்வொரு முஸ்லிமும் இவ்வுலக வாழ்வையும் மறுவுலக வாழ்வையும் பூரணமாக விசுவாசம் கொண்டுள்ளார்கள். மரணத்தின் பின் உள்ள வாழ்க்கை மிகவும் நீண்டது என்பது முஸ்லிம்களின் நம்பிக்கையாகும் இவ்வுலக வாழ்க்கை மூலம் மறுமை வாழ்க்கை சீராக அமைய வழி காண்பதே முஸ்லிம்களின் இலட்சியமாக இருக்கின்றது. அந்த இலட்சியத்தை அடைவதற்கே புனித ஆத்மாக்கள் ஒவ்வொன்றும் முயன்று கொண்டிருக்கின்றன. புனிதமான எல்லா ஆத்மாக்களும், எங்கிருந்து வந்தனவோ மீண்டும் அவ்விடத்தை அடைவதற்கு வழிகாண்பதிலேயே மனமுருகி ஒவ்வொரு முஸ்லிமும் இறுதிப்பகுதியினை செலவிட்டனர். அத்தோடு 'வலக்கரம் கொடுப்பதை இடக்கரம் அறியாத வகையில்'' பலரும் தான தருமங்கள் செய்வதிலும் முன்னின்று செயற்பட்டனர். குடும்பத்தவர் இன பந்துக்கள் உட்பட ஏனையோருக்கும் தருமம் செய்வதில் வசதிபடைத்தோர் மகிழ்ச்சியடைந்தனர். ஒவ்வொரு நோன்பாளியும் நோன்பை முடிக்கும் வேளையில் தனக்குக் கிடைத்த உணவுகளை மற்ற நோன்பாளிகளுக்கும் பகிர்ந்து கொடுப்பதில் அளவில்லாத மகிழ்ச்சியை அடைந்தனர். ஈகைப்பண்பே புனித ரமழானில் முதன்மை பெற்றிருந்தது ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு நோன்பாளியும் ஆத்மீகப் பயிற்சியை மட்டுமன்றி தன்னுணர்வுகளை அடக்கி ஆளும் ஆற்றலையும் பெற்றுக் கொண்டனர். அதன் பெறுபேற மகிழ்ச்சிகரமான ஈகைத்திருநாளில், ஏனைய ஏழைகளும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக தானியங்கள், மாமிசங்கள் போன்றவற்றை அன்பளிப்புச் செய்வதில் வசதியுள்ளோர் முன்னின்று செயற்படுகின்றனர்.

முஸ்லிம்கள் இப்புனித ரமழானில், இம்முறை விஷேடமாக நாட்டின் அமைதிக்காக

(5-ம் பக்கம் பார்க்க)

மௌலவி

கே. எம். எச். காலிதீன் (எம். ஏ.)

## மக்கள் கருத்து

### யார் பொறுப்பு?

எனது கணவராகிய திசைவீரசிங்கம் ஞானசேகரம் அவர்கள் 25-5-1985 ந் திகதி அன்று நாங்கள் குடியிருந்த காணி சம்பந்தமான பிரச்னையைத் தீர்வு காண்பதற்காக யாரையோ சந்திப்பதற்கென வெளியில் சென்றார். மீண்டும் வீடு திரும்பாதபடியால் மூன்று 3) நாட்களாக நாங்கள் பல இடங்களில் தேடிச்சென்றோம் பின்பு 28-05-1985 ந் திகதிய பத்திரிகை மூலமாக உரிமை கோரப்படாத பிணமாக தெல்லிப்பளைச் சந்தியில் கம்பத்தில் கட்டப்பட்டுள்ளார் என அறிந்தோம். உடனே தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டோம். எனது கணவர் தான் அப்பிணமென உறுதிப்படுத்தினோம்.

எனது கணவருக்கு இயக்கங்கள் தண்டனை வழங்கியிருந்தால் அவை ஏன் உரிமை கோரவில்லை? அல்லது இப்படியான கொலையைத் தனிநபரும் தன்னிச்சையாகச் செய்திருக்கலாமென நாங்கள் சந்தேகம் கொள்ள வேண்டியதாகவும் இருக்கின்றது. நான் இன்று எனது ஐந்து பிள்ளைகளையும் காப்பாற்ற வழியின்றி மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இப்பரிதாப நிலையை இயக்கங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுமா? அல்லது எனது இப்பரிதாப நிலை தொடர் கதையாகவே இருக்குமா?

மனைவி

ஞா. தங்கராணி

நாவற்குழி, கைதடி.

# வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்

குளத்தருகே கோயில் இருப்பது செங்கோல் ஆட்சி நடைபெற்ற காலங்களில் நிலவிய ஒரு மரபு. கிராமத்தின் நாமம் குளங்களுக்குச் சூடப்படுவது அன்றைய பண்பாடு. வரப்புயர நீருயர்ந்து நிலம் செழுமை கண்ட அக்காலத்தில் அவ்வவ்வயலில் வாழ்ந்த மக்கள் தம் இஷ்ட தெய்வத்துக்குப் பூசை செய்து விழா எடுத்து இன்புற்றிருந்தனர்.

குளம் வற்றியதால் வயல் வரண்டு மக்களும் வாழ்வின் செழுமை இழந்து நின்ற போதும் குளத்தருகுகளில் வீற்றிருக்கும் வரலாற்றுப் புகழ் ஆலயங்களின் வழிபாடுகளை மறந்திலர், விழாக்களை விட்டிலர்.

நல்லூர் இராசதானியைச் சுற்றுச்சூழ அன்று பெயரோடும், சிறப்போடுமிருந்த குளங்களில் பல இன்று எங்கே இருந்தன' என்று கேட்குமளவிற்குத் தூர்ந்து போயினவாயினும் அங்கிருந்த ஆலயங்கள் அழிந்தில. மென்மேலும் இன்று அவை ஆசாரமும், அழகியலும் கொண்டு மிளிர்கின்றன.

வெட்டுக்குளமும் இன்றில்லையாயினும் நாமம் அழியாது நின்று அதன் அருகே வீற்றிருக்கும் அண்டங்களைக் காத்திடும் அகிலாண்டேஸ்வரி அம்பிகை ஸ்ரீ புவனேஸ்வரி அவளருள் வேண்டுவோர்க்கு அருள் சொரிந்தவண்ணமிருக்கிறாள்.

நாட்டிலும் சுற்றம்சூழ் கிராமத்திலும் உடன் கொல்லும் கொடிய நோய் வந்துற்ற ஒருகால் ஸ்ரீபுவனேஸ்வரியால் தீப ஒளியுடன் பரிதியில் பெரும் திருவீதி உலாச் செய்த கணமே நோய் பறந்ததென்பர்.

இன்று தீப ஒளியும், திருவீதி வலமும் காலத்தால் சுருங்கி நிற்கிறதாயினும் அவள் சொரியும் அருள்பெற அடியார் கூட்டம் அதிகரித்தே வருகிறது.

20-ம் திகதி புனர்பூசத்தில் ஆரம்பித்துப் பதினொரு நாட்களும் ஸ்ரீ புவனேஸ்வரியாள் காராம் பசுவில் சக்தியாகவும், குதிரையில் பூமித்தாயாகவும், சிங்கத்தில் வீர துர்க்காவாகவும், சர்ப்பத்தில் புவனேஸ்வரியாகவும், அன்பு சமாதானம் வேண்டி அன்னப்பறவையிலும் எனப் பல்வேறு வடிவு கொண்டு எழுந்தருளுவது காணக் கண்கோடி வேண்டும்.

—ஐ. சண்முகலிங்கம்

## 15, 17 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட்:

# யாழ். இந்துக் கல்லூரி இரு போட்டிகளிலும் வெற்றி

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்து கல்லூரி சென் பற்றிக்ஸ் கல்லூரிகளின் 15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் போட்டியிலும், 17 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் போட்டியிலும் யாழ். இந்து கல்லூரி வெற்றி பெற்றது.

15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் ஆட்டம் கடந்தசனியன்று யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி 78 ஓட்டங்களைப் பெற்று தமது சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பந்து வீச்சில் அணியின் தலைவர் சோ. சுரேஸ் 22 ஓட்டங்களைப் மட்டுமே கொடுத்து6 விக்கெட்டுகளை கைப்பற்றினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 7 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றிருந்த சமயம் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. துஸ்யந்தன், சுரேஸ், பிரபாகரன் ஆகியோர் முறையே 53, 43, 37 ஓட்டங்களைப் பெற்றனர். இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 78 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி 57 ஓட்டங்களைப் பெற்று தமது சகல விக்கெட்டுகளையும் இழந்தது. எம். நிமல்ராஜ் 29 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சோ. சுரேஸ் 7 விக்கெட்டுகளை 16 ஓட்டங்களைப் கொடுத்து கைப்பற்றினர். இப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி இன்னிங்சாலும் 21 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

17 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் போட்டி யாழ். இந்து மைதானத்தில் நடைபெற்றது முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக்கல்லூரி 7 விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்ற சமயம் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. புவனேந்திரன் 62 ஓட்டங்களையும் சிறிகந்தன் 35 ஓட்டங்களையும், ரவிக்குமார், பிரபானந்தன் ஆகியோர் முறையே 34, 33 ஓட்டங்களை பெற்றனர். தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி 64 ஓட்டங்களை தமது சகல விக்கெட்டுக்களை இழந்தது சவரிமுத்து 30 ஓட்டங்களையும், ரவிக்குமார சிறப்பாக பந்து வீசி ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 138 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி 92 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது பசில் 24 ஓட்டங்களைப் பெற்றார். கார்த்திகேயன் 7 விக்கெட்டுகளை 47 ஓட்டங்களுக்கு கைப்பற்றினர். யாழ். இந்துக் கல்லூரி விக்கற் கீப்பர் செ. பஞ்சகுலசிங்கம் 8 ஆட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்தது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி இன்னிங்சாலும் 46 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

## பிரியாவிடை

[உடுவில்]

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் பல ஆண்டுகளாக ஆரம்ப பிரிவு ஆசிரியையாக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள திருமதி பு. சின்னப்பு, அதிபராக பதவிபெற்று சென்றுள்ள திரு ச. சண்முகலிங்கம் இடமாற்றம்பெற்ற ஆசிரியை திருமதி பி. சின்னராசா ஆகியோரின் சேவையைப் பாராட்டி பாடசாலை நலன்புரிச் சங்கம் தேனீர் விருந்தும் பிரிவுபசார வைபவமும் நடத்தியது.

இவ் வைபவத்திற்கு நலன்புரிச் சங்க தலைவர் செல்வி பு. கந்தையா தலைமை வகித்தார் அதிபர் திரு வி. யோகேஸ்வரன், திரு வி பரிமுரணனந்தசர்மா, திருமதி ஐ. எஸ் சொர்ணமலர் திருமதி ந. செல்லத்துரை ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

## பாலர் வகுப்புக்கு அன்பளிப்பு

(சுழிபுரம்)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயப் பாலர் முதலாம் வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படுத்தக்கூடிய 'டேப் றெக்கோடர்' கருவியொன்றைப் பண்ணாகம் திரு, திருமதி ஜெயநாயகம் தம்பதிகள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். கல்விப் பகுதியினரால் வழங்கப்படும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல்களை இங்கு கல்விகற்கும்மாணவர்கள் கேட்டுப்படிக்க இத நல்வாய்ப்பேற்பட்டுள்ளன.


## பேர்லின் பிரயாணம்

JUNE 24, 27 திகதிகளில் பிரயாணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது நிச்சயமான திகதி மாற்றமில்லாத பிரயாணம்

**யாழ்-கொழும்பு-பங்கொக் வரை**

எமது பிரதிநிதி உங்களுடன்.

- ★ கொழும்பில் தங்குமிட வசதி.
- ★ பிரயாண காசோலை.
- ★ பாஸ்போட். பொண்ட், விசா அனைத்துக்கும்

**லிப்ருஸ் லிமிட்டெட்,**

R. G. பில்டிங், 70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

COLOMBO

**LIBRAS LTD.**
PAUL VI CENTRE,
24, FRONT STREET,
COLOMBO-1


## யாழ்ப்பாணப் பகுதி

# ஜீ.சி.ஈ (சாதாரண) பரீட்சை முடிவு ஜூன் 30க்கு முன் வெளியாகும்

## செய்முறை பரீட்சை 24ல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் நடந்த ஜீ. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சை முடிவுகள் இம்மாதம் 30ம் திகதிக்குள் வெளியாகும் என்று கல்வி இலாகா வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

நேற்று முன்தினம் நடைபெறவிருந்த சில பாடங்களின் செய்முறை பரீட்சை அட்டவணை வந்து சேராததினால் நடைபெறவில்லையென்றும் செய்முறைப் பரீட்சைதொடர்பான பத்திரங்கள் கொழும்பிலிருந்து கல்வி இலாகா உத்தியோகத்தர்கள் இன்று கொண்டுவருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

தபால்சேவை தாமதப்படுவதனாலேயே இவர்கள் நேரில் வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

செய்முறைப் பரீட்சை அநேகமாக இம்மாதம் 24ம் திகதி நடைபெறலாம் என்றும், இரண்டொரு தினங்களில் செய்முறைப் பரீட்சைகளுக்கான புள்ளிகள் போடப்பட்டு விடும் என்றும் இதில் தாமதம் இருக்காதென்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் ஜீ. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சை முடிவுகள் இம்மாதம் 30ம் திகதிக்குள் வெளிவரக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

1985 டிசம்பர் மாதம் நடையெறவிருக்கும் ஜீ. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்கான விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி தினம் இம்மாதம் 30ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் நகரில் சில கல்லூரிகளில் கடந்த ஜீ. சி. ஈ (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றி பரீட்சை முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மாணவர்களையும் மீண்டும் 85 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றுவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. (ச)

## அபிராமி அந்தாதி விளக்கவுரை

[சுழிபுரம்]

வழக்கம்பரை மகாமாரியம்மன் உற்சவகாலத்தில் தினமும் மாலை வேளையில் அபிராமியந்தாதி விளக்கவுரை நடைபெறவுள்ளது. சமயப்பிரசாரகர் ஆசிரியர் கேனு நடராசா இவ்வுரையை நடாத்தவுள்ளார். அபிராமியந்தாதி பாடல் நூறையும் மனனம் செய்பவர்களுக்கு ரூபா நூறு ரொக்கமாக ஒவ்வொருவருக்கும் வழங்க காலம் சென்ற பதுளை ஒவசியர் திரு அ. சுப்பிரமணியம் குடும்பத்தினர் வருடா வருடம் ஆதரவு நல்கி வருகின்றனர். மனனம் செய்பவர்கள் பஜனைச் சபையாருடன் தொடர்பு கொள்ளலாம்.

## 7-வது ஆண்டு பொங்கல்

(மல்லாகம்)

மல்லாகம் கோணப்புலஞான வைரவ கோயில் 7-வது ஆண்டு பொங்கல் நாளை வெள்ளிக்கிழமை இரவு நடைபெறவுள்ளது.

இவ்வாலயப் பொங்கல்விழாவுக்கான விளக்கு வைப்பு வைபவம் கடந்த 14ம் திகதி இடம்பெற்றது. (மா)

## சொல்லாலும்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வும் மனித சமுதாயத்தின் அமைதிக்காகவும் எல்லா மக்களும் சமத்துவத்துடன் வாழ வழி பிறக்க வேண்டுமென்பதற்காகவும், மக்கள் மத்தியில் அமைதி குடிகொண்டு கிலி அகல வேண்டுமெனவும் பிரார்த்தனைகளைச் செய்வனர் "எல்லாமக்களும் ஒரு ஆணி இருந்தும் பெண்ணிலிருந்தும் படைக்கப் பெற்றவர்களே" என்ற அல்குர் ஆனின் கூற்றை நினைவு கூர்ந்த முஸ்லிம்கள் இஸ்லாத்தின் ஒளி, நேர்வழியை உலகுக்குக் காட்ட வேண்டும் எனவும் எப்போதும் பிரார்த்தனை புரிகின்றனர். இப்புனித ஈகைத்திருநாளின் பிரார்த்தனைகள் நமது நாட்டு மக்களுக்கும் உலகமக்களுக்கும் சாந்தி உருவாக வழி அமைக்குமாக 'மனிதன் தன்னைத்தான் மாற்றிக் கொள்ளாதவரை இறைவன் அவனை மாற்றுவதில்லை' என்ற கூற்றைக் கவனத்திற் கொண்டு எமது குறைகளைக் களைந்து நிறைவுள்ள வாழ்க்கையை நாமும் ஏனைய மக்களும் பெற்று வாழ்வதற்கு எமது பிரார்த்தனைகளைச் சமர்ப்பிக்க நல்ல சந்தர்ப்பம் இதுவாகும். அனைவருக்கும் சாந்தியான மார்க்கம் துணைபுரியுமாக.

## அனுராதபுரத்திலிருந்து வந்த——

# சுகாதார ஊழியருக்கு ஏற்பட்டுள்ள கதி!

(பண்டத்தரிப்பு)

அநுராதபுரத்தில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களினால் ஏற்பட்ட போக்குவரத்து தடைகளினால் தற்காலிக அனுமதிபெற்று யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்றிவந்த சுகாதார திணைக்கள ஊழியர்களை தொடர்ந்தும் கடமையாற்ற அனுமதியளிக்க வேண்டாம் என்றும், தங்கள் பகுதி பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சென்று கடமையாற்றுமாறும் கொழும்பிலுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இதுபற்றிய அறிவித்தல் மேலிடத்திலிருந்து கிடைத்ததை அடுத்து தற்காலிகமாக கடமையாற்றிவந்த மேற்படி ஊழியர்களை உடனடியாக விடுவிக்கும்படி யாழ். மாவட்டத்திலுள்ள சகல சுகாதார நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்தல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (க)

## தடை செய்யப்பட்ட

# பகுதிக்குள்ளும் வ. போ. ச. பஸ் சேவை நடைபெற்றது

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் தடை செய்யப்பட்ட வலயங்களுக்குள், நேற்று வ. போ. ச. பஸ் சேவை நடைபெற்றது.

சில பகுதிகள் கடந்த மாதங்களுக்கு முன்னர் தடை செய்யப்பட்ட வலயமாக பிரகடனம் செய்யப்பட்டதை தொடர்ந்து அப்பகுதிகளில் பஸ் சேவை நடைபெறவில்லை.

நேற்று முதல் இப்பகுதிகளுக்குள்ளும் பஸ்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காலை முதல், மாலை வரை நேற்று பஸ் சேவை நடைபெற்றது. க)

## யாழ். ஸ்ரேடியத்தில்

# ஜூன் மாத பென்சன் 24 முதல் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தபாலகங்கள் மூலம் ஒய்வூதியம் பெறுவோருக்கு, யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் ஜூன் மாத ஒய்வூதியம் இம்மாதம் 24ம் திகதி திங்கட்கிழமை முதல் வழங்கப்படும்.

24ம் திகதி-நயினாதீவு, வசாவிளான், பருத்தித்துறை, கோப்பாய், புங்குடுதீவு, சங்கானை.

25ம் திகதி-வேலணை, கொடிகாமம், கைதடி, கரவெட்டி, காங்கேசன்துறை சுழிபுரம்.

26ம் திகதி - சாவகச்சேரி, மானிப்பாய், பண்டத்தரிப்பு, கொக்குவில்.

27ம் திகதி-அச்சுவேலி வட்டுக்கோட்டை, தெல்லிப்பளை.

28 ம் திகதி -யாழ்ப்பாணம், சுன்னாகம், உரும்பராய்

ஜூலை 2-ம திகதி யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை. வண்ணார்பண்ணை, அளவெட்டி. (க)

## இன்று

(புலோலி)

இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்க வடமராட்சிக் கிளையின் விசேட பொதுக்கூட்டம் 20ம் திகதி பருத்தித்துறை வேலாயுதம் ஆண்கள்மகா வித்தியாலய மண்டபத்தில் கிளைத் தலைவர் திரு ஆ. க. மாணிக்கம் தலைமையில் நடைபெறுகின்றது.

## இன்று

[வண்ணார்பண்ணை]

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சைவச் சிறுவர் மகாநாடொன்று இன்று காலை கோப்பாய் சுப்பிரமணிய கோட்டத்தில் நடைபெறவிருக்கிறது.

பேரவையின் தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த ஒன்றுகூடல் மகாநாட்டில் இந்து இளைஞர் தொண்டர் பிரிவுகள் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

## இலங்கைவங்கி தட்டெழுத்தாளர் பரீட்சை:

# வடபகுதியில் நடத்துமாறு பிரஜைகள்குழு கோரிக்கை

[புலோலி]

இலங்கை வங்கி ஆங்கில தட்டெழுத்தாளர்களை நியமிப்பதற்கு கொழும்பில் நடத்திய தட்டெழுத்துப் பரீட்சைக்கு வடபகுதியிலிருந்து விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் தோற்றமுடியாமல் போனதனால் அத்தட்டச்சுப் பரீட்சையை இவ்விண்ணப்பதாரிகளின் நன்மை கருதி வடபகுதியிலே நடாத்த ஆவனசெய்யவேண்டுமென பருத்தித்துறை பிரஜைகள் குழு இலங்கை வங்கி ஆட்சேர்ப்பு ஆளணி முகாமையாளரைக் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் இலங்கை வங்கி ஆட்சேர்ப்பு ஆளணி முகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கை வங்கி ஆங்கில தட்டெழுத்தாளர்களை நியமிப்பதற்கு நடாத்திய தட்டெழுத்துப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் வடபகுதியில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைத் தினத்தின் பின்னரேயே கிடைத்திருந்தன. இதனைப் பருத்தித்துறைபிரஜைகள்குழுஇலங்கை வங்கி ஆட்சேர்ப்பு ஆளணி முகாமையாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததையடுத்து பரீட்சைக்குத் தோற்றமுடியாமல்போன விண்ணப்பதாரிகளின் நன்மைகருதி அப்பரீட்சையை மீண்டும் 26-5-1985 அன்று கொழும்பில் நடாத்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இதற்காக பிரஜைகள் குழு நன்றி தெரிவித்துக் கொள்கின்றது.

ஆனால் துரதிஷ்டவசமாக அநுராதபுரத்தில் நடைபெற்ற வன்செயல்களையடுத்து 26-5-85 அன்று நடாத்தப்பட்ட தட்டெழுத்துப் பரீட்சைக்கும் போக்குவரத்துகள் ஸ்தம்பித்தபடியினால் இவ்விண்ணப்பதாரிகளால் சமூகமளிக்கமுடியாதுபோய்விட்டது எனவே போக்குவரத்து வசதிகள் ஸ்தம்பித்திருக்கும் இவ்வேளையில் இவ்வாறு சமூகமளிக்க முடியாமல் பாதிப்படைந்துள்ள விண்ணப்பதாரிகளின் நலனைக் கருத்திற்கொண்டு இப் பரீட்சையை வடபகுதியில் நடாத்த ஆவனசெய்ய வேண்டும்.

## யாழ். பொது நூலகத்துக்கு:

# நூல்களை அனுப்புமாறு ஆணையாளர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

தமிழ்நாடு அரசு யாழ். பொது நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கிய சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை, அனுப்பிவைக்குமாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் நேற்று இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகராலயத்துடன் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளார். (ச)

# கிளிநொச்சியில் எரிபொருள் ஓரளவு கிடைக்கிறது

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் கடந்த சில வாரங்களாக நிலவிவந்த எரிபொருள் தட்டுப்பாடு இவ்வாரம் முதல் ஓரளவு நீங்கியுள்ளது.

வாகனங்கள், மற்றும் நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கு இவற்றின் சொந்தக்காரர்களுக்கு ஏற்படும் தேவையைப் பொறுத்து கிளிநொச்சி கச்சேரியில் உத்தரவுப் பத்திரம் வழங்கப்படுகிறது

ரக்ஸ், இன்சூரன்ஸ் முதலானவற்றை வைத்திருப்போருக்கே எரிபெருள் வாங்குவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது அனுமதிப் பத்திரம் பெற்றோருக்கே பெற்றோல், டீசல் முதலானவை வழங்கப்படுகிறது குறிப்பிடத்தக்கது.

# 22 பாடசாலைகள் தரமுயர்வு

(கோப்பாய்)

கோப்பாய் கல்வி வட்டாரத்திலுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் இருபத்திரண்டு பாடசாலைகள் அடுத்தாண்டு முதல் தரமுயர்த்தப்படவுள்ளன.

அடுத்தாண்டு நடைமுறைக்கு வரவிருக்கும் வலயப்பாடசாலை அமைப்பில் கோப்பாய் கல்வி வட்டாரத்தில் தற்பொழுது ஐந்தாம் தரம் வரை வகுப்புகளுள்ள பாடசாலைகள் இருபத்திரண்டு' அடுத்த வருடம் தை மாதம் தொடக்கம் ஆறும் வகுப்புக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது. பாடசாலை விபரம் வருமாறு:

அச்செழு மெதடிஸ் மிஷன் பாடசாலை, ஈவினை அரசினர் த. க, பாடசாலை, கதிரிப்பாய் பாலசுப்பிரமணிய வித்தியசாலை, புத்தூர் மெதடிஸ் மிஷன் பாடசாலை, கோப்பாய் நாவலர் வித்தியாசாலை, கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை, கோப்பாய் தெற்கு கந்தவேள் நீர்வேலி சீ சி த க.பாடசாலை, நீர்வேலி தெற்கு இந்து த. க. பாடசாலை, நீர்வேலி றோ. க. த. பாடசாலை, ஒட்டகப் புலம் றோ க. த. பாடசாலை, புன்னாலைக் கட்டுவன் அ த. க பாடசாலை, பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலை சிறுப்பிட்டி அ. த. க. பாடசாலை, சிறுப்பிட்டி இ. த. க. பாடசாலை, உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை, உரும்பிராய் றோ.க. த. பாடசாலை, வளலாய் அ. மி.பாடசாலை, வளலாய் றோ. க. த. பாடசாலை, நீர்வேலி கந்தவேள், இருபாலை சீ சி. த.க பாடசாலை, குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை.

இருபத்திரண்டு பாடசாலைகளிலும் அடுத்தாண்டு ஆறும் வகுப்பு (7ம் ஆண்டு) ஆரம்பமாவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும், இந்த இருபத்திரண்டு பாடசாலைஉட்பட கோப்பாய் கல்வி வட்டாரத்திலுள்ள முப்பத்திரண்டு ஆரம்பப் பாடசாலைகளும் ஏழாம்வகுப்பு (80 ஆண்டு வரை நடைபெறுவதற்கு தொடர்ந்து 1987ம் 1981 ம் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஆ. வ. தங்கராசா தெரிவித்தார்.

## நயமனம

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலுள்ள சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் நிறைவேற்று அதிகார சபையின் உறுப்பினராக சென் ஜோன் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி படைத் தலைவர் திரு. மலறி இ. விஜயசிங்காவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இணக்கசபைகள் அமைக்க முயற்சி

(பண்டத்தரிப்பு)

பொலிஸ் சேவை தற்போது இல்ல திருப்பதால் கிராம மக்களிடையே ஏற்படும் சச்சரவுகளையும், பிணக்குகளையும் சமாதான முறையில் தீர்த்து வைப்பதற்கு கிராம சேவை அலுவலர் பிரிவுகள் தோறும் இணக்க சபைகளை நிறுவுதற்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு க. சண்முகநாதன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

தத்தமது பகுதிகளில் இத்தகைய இணக்க சபைகளை உருவாக்குமாறு அவர் கிராம சேவை அலுவலர்களை பணித்துள்ளார்.

# இன்றைய பலன்

மாதம்: ஆனி

திகதி: 6 (20-6-1985) வியாழன்)

திதி: துதியை முன் இரவுவரை

நக்ஷத்திரம்: புனர்பூசம் பின் இரவுவரை.

மேடம்: வியாபாரத்துறையில் ஈடுபடுபவர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். எதிர்பார்த்த விடயத்தில் நஷ்டமேற்படலாம். நண்பராலும் தொல்லையுண்டு.

இடபம்; வணிகத் துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல்கள் நிவர்த்தியாகும். மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

மிதுனம்: வாய்வுக்கோளாறு உடல்நலத்தைப் பாதிக்கலாம் உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும். தானிய நஷ்டத்திற்கும் இடம் உண்டு.

கடகம்: அவசர முடிவின் மூலம் ஆபத்தைவிலைகொடுத்து வாங்குவீர்கள். மனதில் அமைதி குன்றும். அயலவர்களின் குறுக்கு வழித் தலையீடு கோபத்தைக் கிளறும்.

சிங்கம்: கனிவான நினைவுகளில் மூழ்கிப்போவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும், நீண்டநாள் அபிலாஷை இன்று நிறைவேறும்.

கன்னி: அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சம்பவங்கள் ஏற்படலாம். நெருங்கிய உறவினர் ஒருவருடைய உடல்நலம் பாதிக்கும். இன்று நிதானம் நன்று.

துலாம்: கடந்த கால நினைவுகள் உங்களுக்கு வேதனையைத் தரலாம். விவசாயிகளாயின் இன்று ஒரு சோதனை நாளாகும் அதிக நம்பிக்கையைத் தவிர்த்துக்கொள்ளவும்.

விருச்சிகம்: சூழ்நிலையில் நல்ல மாறுதல் தென்படும். அமைதியான வாழ்க்கையுடன் தெய்வத்தின் அருளும் உண்டு; தொழில்துறையிலும் பாராட்டுக்கு இடமுண்டு.

தனுசு: பூமிப் பிணக்குகளால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

மகரம்: உள்ளத்தில் உவகை கூத்து உறவினர்கள் வருகை. வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும்.

கும்பம்: நண்பர்களுடன் கருத்துவேற்றுமை உருவாகும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம். பொருட்செலவும் உண்டு

மீனம்: தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும் சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம். பொதுப் பணிகளிலும் ஈடுபாடு உண்டு.

**திருமலை வே ரவீந்திரன்**

# திருகோணமலை அகதிகள் தென்பகுதி செல்கின்றனர்

(திருகோணமலை)

பாதிக்கப்பட்ட மக்கள் பலர் தென்பகுதி நோக்கிச் செல்கின்றனராம்

இதேவேளை மூதூரில் 15ஆயிரம் தமிழ் அகதிகள் இருக்கின்றனர்.

சம்பூர், கட்டைபறிச்சான், மூதூர் ஆகிய பகுதிகளில் இவர்கள் உள்ளனர்.

இவர்களைத் திருமலைக்கு அனுப்பிவைக்க அரசாங்கம் முடிவு எடுத்திருப்பதாகத் தெரியவந்தது

எனினும் இவர்களை அங்கு அனுப்பிவைப்பதற்கு திரு தங்கத்துரையும் திருமலை பிரஜைகள்குழுவும்எதிர்ப்புத்தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக திரு. தங்கத்துரை ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டுள்ளார்,

## தொலைபேசிக் கம்பங்கள் மறைகின்றன

[நெடுந்தீவு]

நெடுந்தீவில் தொலைத் தொடர்புக் கம்பிகள் மறைந்தபின் இப்பொழுது தொலைபேசிக் கம்பங்களும் மறைந்த வண்ணமாக உள்ளது. மறைந்து வரும் தொலைபேசிக் கம்பங்களைப் புங்குடுதீவுப் பகுதிகளில் காணக்கூடியதாக உள்ளது

## பொதுக்கூட்டம்

[புலோலி]

வட. இந்து மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி சுப்பிரமணியம் தலைமையில் இம்மாதம் 30ம் திகதி நடைபெறவுள்ளது.

## தொழில்நுட்பக் கல்லூரிக்கு மாணவர்களை சேர்த்தல்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் 1985—86ம் ஆண்டுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன விண்ணப்பங்கள்அனுப்புவதற்கான கடைசித் திகதி இம்மாதம் 28ம் திகதியாகும்.

## இலவச சிகிச்சை

(சுழிபுரம்)

சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினரின் வேண்டுதலை ஏற்ற வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் சார்பில் டாக்டர் கே. பகீரதன் தலைமையில் நான்கு வைத்திய நிபுணர்கள் நூற்றுக்குமேற்பட்ட நோயாளர்களை பார்வையிட்டு மருந்துவகைகள் வழங்கினர். சுழிபுரம். குடாக்கரை காட்டுப்புலம்,பாண்டவட்டை ஆகிய இடங்களிலுள்ளநோயாளர்கள் குறிப்பாக தொழுநோயாளர்கள் பலர் வந்து மருந்து பெற்றுச்சென்றனர்.

எதிர்வரும் சனி, திங்கள்
பேர்லின்
செல்வதற்கு ஆசனங்களுக்கு
உடன் தொடர்பு கொள்ளவும்

★ கொழும்பில் தங்குமிட வசதி.
★ கட்டுநாயக்கா செல்வதற்கான பிரயாண வசதி.
★ பிரயாண காசோலை வசதி
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற்

99-2/56 B, சபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு - 1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரிவீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம். போன்; 22689

**குமரன் மினி**
சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30, 4-30
**Guest Apo's Last Lady**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

A-M 9-00, 12-00
**Emmanuel Kiss Me**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்



**வெலிங்டன்**
10-30 — 2-15 — 4-15
THE HANDS OF THE NIGHT''
(Adults only)
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**லிடோ** சினிமா
10-30 — 2-30
பாண்டியன் — ரேவதி நடித்த
**'புதுமைப் பெண்'**
(ஈஸ்ட்மன் கலர்)



**வின்ஸர்**
தினசரி 10-30, 2-00, 4-15
**Flying Killers**
நீரின் மேல் ஆபத்து! மாமிசம் உண்ண விரும்பும் பிராணிகளை யாரால் தடுக்க முடியும் விந்தை, விறுவிறுப்பு, திகில் நிறைந்த சித்திரம்.
(Adults only)



S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
காட்சி: 10-30, 12-30 2-30 4-30
UNDER THE DOCTOR
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்



**ஸ்ரான்லி மினி**
(சினிமா)
5'X5' திரையில்
10-30, 2-15, 4-15
**DIVINE EMMANUEL**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்



**நியூசாந்தி (மினி)**
யாழ். சாந்தி சினிமாவில்
10 30, 2-30
ஜெய்சங்கர் ஆனந்தபாபு - சங்கிலி முருகன் பி. எஸ். வீரப்பாவின்.
**கடமை**
சிறந்த கதை திகிலூட்டும் படம்



19-6-85 — 20 6-85
**தேவிமினி**
சினிமா
(வின் ஸர்) அருகாமை)
007 Sean connery in
**The GolD Finger**
(Color)


## பஞ்சாயத்து சபை

[கரவெட்டி]

வல்வெட்டித்துறைப் பகுதி மக்களின் குடியியல் பிரச்னை தீர்த்து வைக்குமுகமாக வல்வை பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் பஞ்சாயத்துச் சபை ஒன்று அண்மையில் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வல்வை பிரஜைகள் குழுவைச் சேர்ந்த திரு. எஸ் குமாரசாமி தலைமையில் வல்வை றோ. த. க. பாடசாலையில் நடைபெற்ற இவ் அங்குரார்ப்பண வைபவத்தின் போது இச் சபைக்கு இளைப்பாறிய உத்தியோகத்தர்கள், கல்விமான்கள் அடங்கிய 15 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஒப்படைத்த பொருள்கள் கிடைக்கவில்லையாம்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை ஏற்றிவரும் தனியார் லொறி ஒன்றிடம் கொழும்பில் வைத்து ஒப்படைத்த 50,000 ரூபா பெறுமதியான பொருள்கள் உரியவருக்குக் கிடைக்கவில்லையென்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த குணம் என்று அழைக்கப்படும் சின்னத்துரை அருளானந்தம் என்பவர் தாம் சிங்கப்பூரிலிருந்து கொண்டுவந்த 50,000 ரூபா பெறுமதியான பொருள்கள் யாழ்ப்பாணம் கொண்டு போய்ச் சேர்க்குமாறு யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு போக்குவரத்து லொறியிடம் ஒப்படைத்தாராம். ஆனால் லொறி யாழ்ப்பாணம் வந்ததும் பொருள்களின் உரிமையாளர் குறிப்பிட்ட லொறி உரிமையாளரிடம் சென்று பொருள்களைக் கேட்டபோது அவை இடைவழியில் இனந்தெரியாதவர்களினால் பறித்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதாம்.


**மொடேர்ண் மினி சினிமா**
[ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை]
19 - 06 - 85 தொடக்கம்
**Karate Master**
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.



**ராஜா** தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10 30, 2 30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
**சலங்கை ஒலி**
கடைசிவாரம்



**லதா மினி**
(கோண்டாவில்)
10-30, 3-30
தியாகராஜன்— நளினி
**'காவல்'**



**பவித்ரா மினி**
கஸ்தூரியார் வீதி
(யாழ் இந்துக் கல்லூரியடி)
4' திரைவானில்
"SUMMER IN HEAT"
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்


## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## யாழ். ப. நோ. கூ. சங்கத் தளபாடங்கள் உபகரணங்கள் ஏலவிற்பனை

கடந்த 15-6-85, 16-6-85 ஆகிய திகதிகளில் எங்களால் வெளியிடப்பட்ட, 22-6-85 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு இல. 17, கண்டிவீதியிலுள்ள கூட்டுறவு வைத்தியசாலையில் நடக்கவிருந்த ஏல விற்பனையும், 23-6 85 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு பிரதானவீதியிலிருக்கும் ரவுண் சொப் கிளையில் நடைபெறவிருந்த ஏல விற்பனையும் திகதி பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

பதில்பொதுமுகாமையாளர்,
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
18-6-85

3925

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சுழிபுரம் என்னுமிடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தையா என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும் உடைமைப்பொருட்களினதும்விடயத்தில்

மரணமெய்தியவர்

கந்தையா கைம்பெண் சிதம்பரம், சுழிபுரம்.

மனுதார்

வழ. இல T/220

எதிராக

1. கந்தையா திசையரத்தினம்
2. கந்தையா ஆனந்தரத்தினம்
3. கந்தையா மகள் இரத்தினலட்சுமி
4. கந்தையா சந்திரரத்தினம்
5. கந்தையா மகள் இந்திராணி
6. கந்தையா சூரியரத்தினம்
7. கந்தையா முருகரத்தினம்
8. கந்தையா மகள் விஜயராணி
9. கந்தையா மகள் விஜயலட்சுமி (பராயமற்றவர்)

மேற்கூறிய 9ம் எதிர்வாதி பராயமடையாததால் இவரின் பராமரிப்புக்காரர்.

10. கிருஷ்ணர் கந்தையா, சுழிபுரம். எல்லோரும் சுழிபுரம்

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதமில்லாமரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு ஆனி மாதம் 12-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்

1985-ம் ஆண்டு பங்குனி மாதம் 19-ந் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
சு. வேலாயுதம்,
பதில் பதிவாளர்,

என்னால் வரையப்பட்டது
தா சங்கரப்பிள்ளை,
மனுகாரின் சட்டத்தரணி,
12-6-85

காரணம் காட்டும் திகதி 28-8-85 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

(3848) பதிவாளர்.

## நெல்லியடியில் சைக்கிள் திருட்டு

(கரவெட்டி)

நெல்லியடிப் பகுதியில் நீண்டகாலத்தின் பின் மீண்டும் 'சைக்கிள்' திருட்டுக்கள் தொடங்கியிருக்கின்றன.

கடந்த ஒரு வாரத்துக்குள் இரண்டு சைக்கிள்கள் காணாமல் போயுள்ளனவாம்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கொக்குவில், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிஐயா இராசரத்தினம் கைம்பெண் தையல்நாயகியின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } T/3'82

இராசரத்தினம் தவேந்திரா
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மனுதார்

எதிராக

1. தம்பிஐயா இராசரத்தினம் மகள் பத்மினி
2. இராசரத்தினம் புவனேந்திரா (பராயமற்றவர்)
3. இராசரத்தினம் சத்தியேந்திரா (பராயமற்றவர்)
4. இராசரத்தினம் இராஜேந்திரா (பராயமற்றவர்)
5. சின்னத்துரை கனகரத்தினம் (1ம், 2ம், 3ம், 4ம் எதிர்வாதிகளின் சட்டப்பாதுகாவலராக) எல்லோரும் கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட தத்துவ வழக்கு மேற்குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கப்படுகிறது. அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 26ந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்

நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்,

1985ம் ஆண்டு பங்குனிமாதம் 25ந் நாளன்று தேதியிடப்பட்டது. 3899

## மின்சார மோட்டார் களவு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அம்மன் வீதியிலுள்ள தோட்டம் ஒன்றில் புதிதாக கொள்வனவு செய்து கிணற்றில் இணைக்கப்பட்டிருந்த சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்சார மோட்டர் ஒன்று இரவு நேரத்தில் திருடப்பட்டுள்ளது.

## பிரஜைகள் குழுக்கள்

(கல்வியன்காடு)

அரியாலை மேற்கு, அரியாலை கிழக்கு கிராமசேவகர் பிரிவுக்கான பிரஜைகள்குழு அங்குரார்பண கூட்டம் அண்மையில் நடைபெற்று நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. அரியாலை கிழக்கு பிரஜைகள் குழு தலைவராக கலாநிதி மோகனதாஸ் தெரிவானார் செயலாளர் ஆசிரியர் திரு. என். செல்வரத்தினம். பொருளாளர் திரு. ரி. சிவலிங்கம்.

அரியாலை மேற்கு பிரஜைகள் குழு நிர்வாகிகள் வருமாறு. தலைவர் திரு. என். கிருஸ்ணசிங்கம் செயலாளர் திரு. இ. அரசகேசரி பொருளாளர் திரு. வி. நஜேராஜ் இரண்டு பிரஜைகள் குழுவிலும் ஏழு பேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவாயினர்.

## நெடுந்தீவில் ஹர்த்தால்

[நெடுந்தீவு]

நெடுந்தீவு-குறிகாட்டுவான் பிரயாணிகள் படகில் நிகழ்ந்த வன்செயலில் ஒருமாத நிறைவான நாளையும் அதன் முதல் நாளையும் நெடுந்தீவு மக்கள் பூரண ஹர்த்தாலாகக் கடைப்பிடித்தனர்.

மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதைப் பகிஷ்கரித்ததுடன் கூட்டுறவு, தனியார் கடைகளும் மூடப்பட்டிருந்தது.

வீதி தோறும் கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தது. மக்கள் நடமாட்டமும் குறைவாகவே வீதிகளில் காணப்பட்டது.

வன்செயல் சம்பவத்தில் உயிரிழந்தவர் தொகை 36 ஆகும்.


# 31ம் நாள் நினைவஞ்சலி
## அமரர் வேலுப்பிள்ளை ஏகாம்பரம்

அன்னை மடியில்: 12-6-1916
ஆண்டவன் அடியில்: 21-5-1985



அன்புத் தெய்வமே!

எம்மையெல்லாம்
ஆருத்துயரில்
மூழ்கடித்து,
மீளாத்துயில் கொண்டு
இறைவனடி
சேர்ந்த தங்களின்
ஆத்மா
சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரி.

சரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை, 17-6 85

(3889)

# யாழ். நகர வீதித் திருத்த...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துச் சென்ற நான்கு டிராக்டர் வண்டிகளையும் விரைந்து ஒப்படைக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விரிவான முறையில் வீதித் திருத்த வேலைகள் செய்யப்படவுள்ளதால் அந்த டிராக்டர் வண்டிகள் பெரிதும் தேவைப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தவிர யாழ். கோட்டைப்பகுதியிலுள்ள இறைச்சிக்கடைகள், மீன்சந்தை ஆகியனவற்றை மீண்டும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் தெரிவித்தார். கோட்டையைச் சுற்றிவரவுள்ள பாதுகாப்புப் படையினரால் இப்பகுதிகளில் நடமாடுவோருக்கு எதுவித இடைஞ்சல்களும் இருக்காதென பிரிகேடியர் உறுதியளித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ். சுப்பிரமணியம் பூங்காவை மீண்டும் திறந்து அதனைச் சீர்செய்வதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதாகவும், கடந்த ஒன்றரை மாத காலமாக இப்பூங்கா பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்பட்டிருந்ததாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (கி)

## நயினை உற்சவம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து நயினாதீவிலுள்ள பாதுகாப்புப்படையினருடன் கலந்துரையாடினர்.

கோயிலுக்குவரும் அடியார்களுக்கு தம்மால் எதுவித குறுக்கீடுகளும் ஏற்படமாட்டாதென இவரிடம் அங்குள்ள இராணுவ அதிகாரிகள் உறுதியளித்தனர்.

இதே வேளை நயினை உற்சவத்தை முன்னிட்டு குறிகட்டுவானுக்கும், நயினாதீவுக்குமிடையில் மணித்தியாலத்துக்கு ஒரு தடவை படகுச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை இப்படகுச் சேவைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரிய ஆலோசகர் பதவி

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்களிடமிருந்து ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பாடங்களில் மூன்று ஆண்டு கால ஆசிரிய அனுபவம் உடையவர்கள் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள்.

விண்ணப்பங்கள் அவ்வப் பகுதி லட்டாரக் கல்வி அதிகாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## ஒரு லட்சம...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் காவலிலிருந்த மூவரை துப்பாக்கி முனையில் பயமுறுத்திவிட்டு பெற்றோல், டீசல், மண்ணெண்ணை ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகப் புகார்செய்யப்பட்டுள்ளது. [மா]


## மரண அறிவித்தல்

### திருமதி மீனுட்சி (புவனம்மா) இரத்தினம்

இவர் இரத்தினத்தின் அன்பு மனைவியும், சுதந்திரராணி, வசந்தாதேவி (ஆசிரியை), புவனேஸ்வரன் (ஆசிரியர்), சித்திரா ஆகியோரின் அன்புத்தாயாரும், பேரின்பநாதன், லோகநாதன் ஆகியோரின அன்பு மாமியாரும், பத்மபிரியா, ரமணகுமரன் ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 20-6-85 வியாழக்கிழமை மாலை 3-00 மணியளவில் கரம்பனில் நடைபெறும்.

(3931) கு. நித்தியானந்தன்

## மரண அறிவித்தல்

### திருமதி கெங்காதரன் மனோன்மணி

தாவடியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆ. கெங்காதரனின் மனைவியும், மஞ்சுளா (வீடமைப்புத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), சுதர்சன் சியாமளா: கலாதரன், சசிகலா, கோபிநாத் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற திருமதி அருளம்பலம் இரத்தினபூபதி, திரு சு. இராசரெத்தினம் (அரசினர் வைத்தியசாலை- மன்னார்), திரு. சு. முத்துக்குமாரசாமி ஆகியோரின் சகோதரி திருமதி கெங்காதரன் மனோன்மணி 19-6-85ல் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-6-85 வியாழக்கிழமை பிற்பகல் 2-00மணிக்கு தாவடி வடக்கு இல்லத்தில் நடைபெற்று தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும். 3936

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மலோசனி முத்தையா

காலம்சென்ற சரவணமுத்து முத்தையாவின் மனைவி பத்மலோசனி காலமானார். இவர் பத்மாவதியின் அன்புச் சகோதரியும், வல்லிபுரம். காலம்சென்ற ராகவன், விஸ்வலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். கிறிஸ்ரி (சரா) F. A. O. Rome, சீற்ரா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை), இந்திரன் (நைஜீரியா), டாக்டர் ரவி (U. K.), டாக்டர் லோகன் (U. K) ஆகியோரின் அன்புத்தாயாரும், இசோல்டே. கிளப் ஜெயசிங்கம் (இ போ. ச. கோண்டாவில்), ரஞ்சி, பிரமிலா, டாக்டர் மங்கை ஆகியோரின் அன்புமாமியாரும் ஆவர். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (20-6- 985) வியாழக்கிழமை பிற்பகல் 3-00மணிக்கு பரியோவான் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். 3935


# "நத்தார் மடல்களில் வடபகுதி அபிவிருத்திக்கு உதவும்படி கோரினேன்!"

## வண. பிதா சிங்கராயர் சாட்சியம்!!

[கொழும்பு]

''வடபகுதியை அபிவிருத்தி செய்ய ஆடம்பரப் பொருட்களைக் கொண்டுவராது இயந்திரசாதனங்களைக் கொண்டு வரும்படி வெளிநாடுகளிலுள்ள தமிழ் இளைஞர்களை நத்தார் வாழ்த்துமடல்கள் மூலமாகக் கேட்டிருந்தேன்'' என்று வண. பிதா ஆபரணம் சிங்கராயர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ள இவர் மீதான வழக்கு நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி எச். டபிள்யு. சேனநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போதே மேற்கண்டவாறு வண. சிங்கராயர் சாட்சியமளித்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணி பாலா தம்பு சாட்சியத்தை நெறிப்படுத்தினர்.

வண. பிதா சிங்கராயர் தமது சாட்சியத்தில் தொடர்ந்து கூறியதாவது:-

''வடபகுதி அபிவிருத்திகள் மாற்ருந்தாய் மனப்பான்மையில் புறக்கணிக்கப்பட்டு வந்தது.

இதனைக் கருத்திற்கொண்டே வெளிநாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கில் வேலைபார்க்கும் இலங்கைத் தமிழ் இளைஞர்களிடம் எமது பிரதேச அபிவிருததுக்கு உதவும்படி கோரினேன்.

இந்தக் கோரிக்கையை 1979-ம் ஆண்டு டிசம்பர் நத்தார் வாழ்த்து மடல்களில் அவர்களுக்கு விடுத்திருந்தேன்.

சுமார் ஆயிரம் வாழ்த்து மடல்களை நண்பர்கள் நன்கொடையாக வழங்கிய பணத்தில் தயாரித்திருந்தேன். சகல மடல்களிலும் நானே கையெழுத்திட்டேன்.

''யாழ் குடாநாட்டின் 60 சதுரமைல் பரப்பில் 6 லட்சம் பேர் வாழ்கின்றோம். இப்பகுதி நீர்வளம் உவராகிவருகின்றது.

எனவே அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஆடம்பரப் பொருட்களைக் கொண்டுவராது இயந்திர சாதனங்களைக் கொண்டுவரும்படி கேட்டிருந்தேன்.

நிதிஉதவிகளை அனுப்ப விரும்புவோர் முன்னள் இலங்கை வங்கி முகாமையாளர் சி. லோகநாதனின் அபிவிருத்திநிதி ஆலோசனை நிறுவனம் அல்லது யாழ். பல்கலைக் கழகத்தின் 'மனிதன்' என்ற அமைப்புக்கு தமது உதவிகளை அனுப்பும்படி கேட்டிருந்தேன்'' என்ருர். (கி - இ)

## தீவிரவாதிகள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அமையவேண்டும்.

யுத்த நிறுத்தம் என்ற போர்வையில் இராணுவ பலம் தமிழ்ப் பகுதிகளில் மேலும் அதிகரிக்கப்படலாம். அத்துடன் அத்துமீறல் குடியேற்றங்களும் மேற்கொள்ளப்படலாம் எனவும் தமிழ் மக்களிடையே சந்தேகங்கள் நிலவுகின்றன இவற்றை நிவர்த்தி செய்வதாக அரசின் போர் நிறுத்த நடவடிக்கைகள் அமையவேண்டும்.

அத்துடன் நிரந்தர அரசியல் தீர்வுக்கும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். நீண்ட நாட்களாக பாதிப்படைந்திருந்த தமிழ் மக்களின் சாதாரண வாழ்க்கையை வழமைக்குக்கொண்டு வரும் நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும்'' என்ருர்.

''நாம் ஆயுதங்களை முதலில் ஏந்தவில்லை அரசாங்கமே அவற்றை ஏந்தியது என்று தீவிரவாத இளைஞர்கள் கூறுகிருர்கள். எனவே அரசாங்கம் தற்போது போர் நிறுத்தம் என்று கூறுவதால், தீவிரவாதிகளும் அதற்கு இணங்குவார்கள் என்பதில் ஆச்சரியமில்லை.''

இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக நடத்தப்படவுள்ள உச்சக் கட்டப் பேச்சுக்கள் நல்ல முடிவுகளையே தரவேண்டும்'' என்ருர்

இதேவேளை இலங்கை நிலைமைகள் சுமுகபடையுமாளுல் விரைவில் தாம் கொழும்பு வருவதாகவும் திரு. அமிர்தலிங்கம். கலாநிதி நீலன் திருச்செல்வத்திடம் தெரிவித்துள்ளார். (இ)

# கோட்டைக்குள்—

# இராணுவம் — மாணவர் உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு பிரபல கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே இன்று உதைபந்தாட்டப்போட்டி நடைபெறவுள்ளதாக அக்கல்லூரி வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

யாழ். கோட்டைக்குள்ளிருக்கும் திறந்த வெளியிலேயே இவ்வுதைபந்தாட்டப்போட்டி நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது

பாதுகாப்புக் கருதியே கோட்டைக்குள் உதைபந்தாட்டப்போட்டி நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகிறது. [மா]

## வடபகுதி ரயில்சேவை

# தொலை தொடர்புகள் பெரிதும் சீர்குலைவு!

(யாழ்ப்பாணம்)

கொழும்புக்கும்- காங்கேசன் துறைக்குமிடையே இம்மாதம் 22-ம் திகதி ரயில்சேவை நடைபெறவுள்ளதாகத் தெரிவித்திருந்தபோதிலும், கிளிநொச்சியிலிருந்து காங்கேசன்துறை வரை ரயில் பாதை ஓரமாகவுள்ள தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனுல் ரயில் சேவைக்குப் பெரும் தடங்கல் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஓமந்தையில் இடம்பெற்ற தண்டவாளத் தகர்ப்புச் சம்பவத்துக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்த சரக்கு வண்டி சம்பந்தமாக யாழ் புகையிரதநிலையத்துடன் தொலைபேசித் தொடர்பு கொள்ளமுடியாததால், ரயில் கடவையையும் இடித்துத் தள்ளிக்கொண்டு அந்த சரக்கு வண்டி ரயில்நிலையத்தை வந்து சேர்ந்ததாம். அன்று புகையிரதக்கடவையில் தெய்வாதீனமாகப் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாமையால் உயிர்ச்சேதம் எதுவும் இடம்பெறவில்லையாம்.

சில இடங்களில் தண்டவாளங்களும் சீர்படுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (மா)

## இந்திய ராஜதந்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. பழனியாண்டி தொடர்ந்து கருத்துவெளியிடுகையில் இலங்கை அரசுக்கும், தமிழ் ஈழத் தலைவர்களுக்குமிடையே அத்தீவில் நடைபெறும் இனப் பிரச்னைக்கு ஒரு நிரந்தர தீர்வை ஏற்படுத்தும் வண்ணப் இரு தரப்பினரும் பயனுள்ளவகையில் பேச்சுவார்த்தை நடத்த இந்த போர் நிறுத்த நடவடிக்கை வழி வகுக்கும் என்றும் தெரிவித்தார்- [ரா]

## லலித் தென்கொரியா பயணம்!

(கொழும்பு)

தேசியபந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி இம்மாதம் 22ம் திகதி சனிக்கிழமை தென்கொரியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தென்கொரிய அரசாங்கம் விடுத்த அழைப்பை ஏற்றே, பாதுகாப்பு அமைச்சர் அங்கு செல்கிருர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்னையில் தென்கொரியா அரசும் அதிக கவனம் செலுத்திவருவது குறிப்பிடத்தக்கது. (மா)

## ஓமந்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை விடுத்தது.

அவசியமற்ற கடத்தல், கொள்ளைகள் போன்ற சமூக விரோதச் செயல்கள் இடம்பெறுவது குறித்தும் அவ்வானொலிச் செய்தியில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் தமது முகாமில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் பற்றித் தெரிவிக்கப்பட்ட செய்திக்கும் இயக்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது. (மா)

## மீண்டும்...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

இது சம்பந்தமான நடவடிக்கைகளில் இலங்கை - இந்திய அதிகாரிகள் ஈடுபட்டுள்ள அதேவேளை, இச்சேவைக்கென புதிய கப்பல் ஒன்றினையும் கப்பல் கூட்டுத்தாபனம் வாங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ரா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81 Eelanadu P. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126.